**ஆல் இந்தியா இமாம்ஸ் கவுன்சில்**

***ஜும்ஆ உரை (20-12-2109)***

# *எழுந்து வா ! போராடு ! !*

## *முன்னுரை*

*இந்த உலகம் நிலையானதல்ல ; மனிதனுக்கு வழங்கப்பட்டுள்ள வாழ்வும் நிலையானதல்ல ; அதே வேளையில் மனிதன் படைக்கப்பட்டிருப்பது உண்டு , களித்து , உல்லாச வாழ்வு வாழ்வதற்கல்ல . அகில உலக இரட்சகனால் படைக்கப்பட்ட எத்தனையோ படைப்புகள் ஆயிரமாயிரமாண்டு காலம் மாற்றம் காணாமல் அப்படியே தன் வழியையும் , வாழ்வையும் நகர்த்தி கொண்டிருக்க , மனிதன் மட்டும் நூற்றாண்டு , நூற்றாண்டுகளாக மாற்றம் பெற்று வரும் வாழ்வியல் ஏற்றம் பெற்றிருக்கின்றான் . அதற்கு நாம் வாழ்கின்ற இன்றைய நவீன உலகமே சாட்சி . ஆக அறிவியல் புரட்சிக்காரனாக மனிதனைப் படைத்த இறைவன் மனிதரிடம் எதிர்ப்பார்ப்பது என்ன ? இவ்வுலகையும் , இதிலுள்ள பொருட்களையும் மனிதனுக்கு வசப்படுத்தித் தந்த வல்ல ரஹ்மான் ( அடியார்களிடம் ) மனித சமூகத்திடம் எதிர்நோக்கும் செயல்பாடுகள் யாது?*

## வாழ்வே போராட்டம்

*அல்லாஹ் தனது வசனங்களில் கூறுகின்றான் ;*

*உங்களில் எவர் செயல்களால் மிகவும் அழகானவர் என்பதைச் சோதிப்பதற்காக அவன் மரணத்தையும் , வாழ்வையும் படைத்தான் . மேலும் அவன் ( யாவரையும் ) மிகைத்தவன் ; மிக மன்னிப்பவன் . ( அல்குர்ஆன் - சூரா முல்க் : 2 )*

*மரணத்தையும் , வாழ்வையும் வைத்தே அல்லாஹ் மனிதர்களின் செயல்பாடுகளை தீர்மானிக்கிறான் . மனிதன் பிறந்ததிலிருந்து மரணிக்கின்ற வரை உள்ள போராட்ட வாழ்க்கைதான் சோதனைக் காலம் என்பதை நாம் உணர வேண்டும் .*

*நமக்கு நன்மை தீமைகளை தேர்வு செய்யவும் , நல்வழியை . தீய வழியை தேர்ந்தெடுக்கின்ற உரிமையும் வழங்கப்பட்டிருப்பது சோதனை காலமான இவ்வுலகில் நன்மையை நோக்க நமது போராட்ட வேகம் எந்தளவிற்கு உள்ளது என்பதை கண்டறியவே .*

## போராட்ட வழிமுறைகள் ( அடிப்படைகள் )

*நன்மையை ஏவுதல் , தீமையைத் தடுத்தல் , நன்மையானவற்றிற்கு உதவுதல் , தீமைக்கு எவ்விஷயத்திலும் உதவி செய்யாமலிருத்தல் என்பனவற்றை குர்ஆன் வசனங்களும் , நபி ( ஸல் ) அவர்களின் பொன்மொழிகளும் போராட்ட வழிமுறைகளாகவும் , அடிப்படைகளாகவும் நமக்கு விளங்குகின்றன .*

*அல்லாஹ் கூறுகிறான் ; மனிதர்களு ( டைய நல்வாழ்வுக்காக வெளியாக்கப்பட்ட சிறந்த உம்மத்தினராக நீங்கள் இருக்கிறீர்கள் . ( ஏனெனில் ) நீங்கள் நன்மையைக் கொண்டு ஏவுகிறீர்கள் . தீமையை விட்டும் தடுக்கிறீர்கள் . மேலும் அல்லாஹ்வை ஈமான் கொள்கிறீர்கள் . வேதக்காரர்களும் ( உங்களைப் போன்று ) நம்பிக்கை கொள்வார்களாயின் அவர்களுக்கு அது நன்மையாக இருக்கும் .*

அவர்களில் நம்பிக்கையாளரும் இருக்கின்றனர். ( எனினும் ) அவர்களுள் பெரும்பாலானோர் ( வரம்பு மீறிய ) பெரும் பாவிகளாக இருக்கின்றனர்.

மேலும் கூறுகிறான்;

மேலும் நன்மையிலும் , பயபக்தியிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள். பாவத்திலும் , பகைமையிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ள வேண்டாம். மேலும் அல்லாஹ்வை அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் வேதனை செய்வதில் மிகக் கடினமானவன். ( அல்குர்ஆன் 5 : 2 )

## முன்னுரிமைப் போராட்டங்கள்

இவ்வுலகில் நமது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவே பெரும் போராட்டங்கள் மேற்கொள்ள வேண்டிய சூழல் இன்று நிலவுகிறது. இதற்கு மத்தியில் நமது செயல்பாடுகளை அழகாக்குகின்ற மறுமைக்கான போராட்ட களங்களுக்கு முகங் கொடுக்க வேண்டிய அவசியமும் , அவசரமும் உள்ளது.

பொதுவாகவே நமது போராட்டங்கள் அல்லாஹ்வினால் தூக்கி எறியப்பட்டவனும் மனிதனின் பரம பகிரங்க விரோதியுமான ஷைத்தானையும் , அவனைப் பின்பற்றக்கூடிய சக்திகளையும் எதிர்த்துப் போராடுவதே ஆகும்.

' லா இலாஹ இல்லல்லாஹ் ' என்ற கலிமாவின் அடிப்படை இதுவேயாகும். இதன் அடிப்படையிலேயே ஆதம் ( அலை ) முதல் நபி ( ஸல் ) அவர்கள் வரை அனைத்து நபிமார்களும் கலிமாவோடு அன்றைய நாட்களில் நிலவியிருந்த அனைத்து விதமான தீமைகளுக்கும் எதிராக போராடினார்கள்.

## 1. மனோ இச்சைக்கெதிரான தனிமனிதபோராட்டம்

தனிமனி வாழ்க்கையில் படைத்த ரப்புவிற்கும், அவனுக்குமான தொடர்பு ( வணக்க, வழிபாடுகள் ) குடும்ப வாழ்வியல் , பொருளாதார தேடல் , உறவுகள் மற்றும் அண்டை அயலாருடன் அணுகுமுறை என அனைத்து தளங்களிலும் குர்ஆன் , சுன்னாவை நிலை நிறுத்த போராடுவது என்பது நமது இரத்த நாளங்களில் ஓடித்திரிகின்ற , நமது மனோ இச்சையை நமக்கு கடவுளாக்கி நம்மை வழி கெடச் செய்யுமஷைத்தானுக்கு எதிரான மாபெரும் போராட்டமாகும்.

பின்வரும் இறைவசனங்கள் இதை உறுதிப்படுத்துகிறது;

அப்பால் ( அல்லாஹ்வாகிய ) அவன் அதற்கு அதன் தீமையையும் , அதன் நன்மையையும் உணர்த்தினான். திட்டமாக ( ஆன்மாவாகிய ) அதை தூய்மைப்படுத்தியவன் வெற்றியடைந்து விட்டான். அதை ( பாவச் செயலில் ) எவன் கலங்கப்படுத்தி விட்டானோ அவன் திட்டமாக நாசமடைந்து விட்டான். ( அல்குர்ஆன் : 91 : 8, 9 , 10 )

மேலும் மற்றோர் இடத்தில் கூறுகிறான்

அந்நாளில் ( உலகில் ) மனிதன் தான் முயன்றவற்றை நினைவுபடுத்திக் கொள்வான். மேலும் பார்ப்பவர்களுக்கு தெரியும் விதத்தில் ) நரகம் வெளிப்படுத்தப்படும். ஆகவே எவன் வரம்பு மீறினானோ மேலும் இவ்வுலக வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டானோ அப்பொழுது நிச்சயமாக நரகம் அதுவே ( அவனது ) ஒதுங்குமிடமாகும்.

*இன்னும் எவர் தனது ரப்புவின் முன்னிலையை அஞ்சி , ( தனது ) ஆன்மாவை , மனோ இச்சைகளை விட்டுத் தடுத்துக் கொண்டாரோ , அப்பொழுது நிச்சயமாக சுவனம் , அதுவே ( அவரின் ) ஒதுங்குமிடமாகும் . ( அல்குர்ஆன் - 79 : 35 - 41 )*

***2 . கலாச்சார சீரழிவிற்கு எதிரான போராட்டங்கள்***

*அல்லாஹ்வினால் அவனது தூதர் நபி ( ஸல் ) அவர்களின் திரு மொழிகளால் பாவங்கள் என்றும் , மானக்கேடானவைகள் என்றும் வலியுறுத்தப்பட்டவை சமூகத்தில் பரவி காணப்படுதலே சமூக கலாச்சார சீரழிவிற்கு பெரும் காரணமாகும் .*

*வட்டி , விபச்சாரம் , மது , சூது , ஆபாசம் , பொய் , மோசடி , வஞ்சகம் , குழுச் சண்டை என சமூகம் உள்ளும் , புறமும் செல்லரித்து பலவீனமாகக்கூடிய அனைத்து தீமைகளுக்கும் எதிராக நம்மை நிலைப்படுத்திக் கொள்ளுதல் , அதனை எதிர்த்து போராடி அழிப்பதற்கான குழு முயற்சிகளை மேற் கொள்வதும் நமது போராட்டக் களத்தின் பெரும்பங்காகும் .*

*நபி ( ஸல் ) அவர்கள் கலாச்சார சீரழிவிற்கெதிராக போராடி மாண்புமிக்க ஓர் சமூகத்தை கட்டமைத்தார்கள் . ஆதலால்தான் விபச்சாரத்திற்கான தண்டனையை மனமுவந்து பெற்றுக் கொண்ட ஸஹாபாக்களையும் , ஸஹாபிய பெண்மணிகளையும் , செல்வம் காலடியில் குவிந்த போதும் நேர்மை தவறாத குண சீலர்களையும் இஸ்லாமிய வரலாற்றில் காண முடிகிறது .*

### *3 . ஷைத்தானியசக்திகளுக்கு எதிரான போராட்டங்கள்*

*அல்லாஹ்வுடைய அனைத்து தூதர்களும் , இவ்வுலகில் அல்லாஹ் தந்த ஆட்சி அதிகாரங்களை வைத்துக் கொண்டு ஷைத்தானிய சக்திகளாக வலம் வந்த அனைத்து கொடுங்கோ - லர்களையும் எதிர்த்து போராடினார்கள் .*

*நபி இப்ராஹீம் ( அலை ) அவர்களின் நம்ரூதிற்கு எதிரான போராட்டமும் , நபி மூஸா ( அலை ) அவர்களின் ஃபிர்அவ்னிற்கு எதிரான போராட்டமும் இதற்கு சரியான உதாரணங்களாகும் .*

*' போராட்டங்களில் சிறந்தது அநியாயக்கார அரசன் முன்பு நீ செய்வது அநியாயம் ' என்று கூறுவது என நபி ( ஸல் ) அவர்கள் கூறினார்கள் .*

*அல்லாஹுதஆலா குர்ஆனில் பல இடங்களில் அநியாக்கார ஆட்சியாளர்கள் முன்பு சத்தியத்தை எடுத்துக் கூறிய நபிமார்களின் வரலாற்றையும் , அஸ்ஹாபுல் கஹ்ஃப் - குகை வாசிகள் போன்றோரின் வரலாற்றையும் படிப்பினையாக கூறியிருப்பதன் காரணம் இதுதான் .*

*' லா இலாஹ இல்லல்லாஹ் ' எனும் சத்தியக் கலிமாவை ஏற்றுக் கொண்ட முஃமின்கள் ஒரு போதும் அசத்தியவாதிகளுக்கு அடிபணியவோ , அடிமைப்படவோ மாட்டார்கள் . உலக இறுதி நாள் வரை முஃமின்களில் ஒரு கூட்டம் மறுமையை முன் வைத்து போராடிக் கொண்டே இருக்கும் . அல்லாஹ் நாடினால் மறுமையில் செயல்களில் அழகானவர்களாக , சோதனையில் வென்றவர்களாக எழுப்பப்படுவார்கள் .*

*ஒரு முஃமினுடைய ஈமானின் வலிமை , நன்மையை ஏவுவது , தீமையைத் தடுப்பது ( சத்தியத்திற்கு துணை நிற்பது , அசத்தியத்தை எதிர்ப்பது போன்ற செயல்களைக்கொண்டு தீர்மானிக்கப்படுகிறது .*

**சம்பவம்**

*அனஸ் ( ரளி ) அவர்கள் அறிவிக்கிறார்கள் ; யூதன் ஒருவன் சிறுமி ஒருத்தியை இரண்டு கற்களுக்கிடையே வைத்து நசுக்கிவிட்டான் . அந்தச் சிறுமியிடம் மக்கள் , உன்னை இப்படிச்*

*செய்தவன் யார் ? இன்னாரா ? இன்னாரா ? என்று கேட்டனர். யூதனின் பெயர் கூறப்பட்டவுடன் அச்சிறுமி ( ஆம் அவன்தான் என்பதற்கு அடையாளமாகத் ) தலையசைத்தாள். யூதன் பிடிக்கப்பட்டு தன் குற்றத்தை ஒப்புக் கொண்டான். நபி ( ஸல் ) அவர்கள் அவனுடைய தலையை இரண்டு கற்களுக்கிடையே வைத்து நசுக்கும்படி உத்தரவிட அவ்வாறே அவனுடைய தலை நசுக்கப்பட்டது. ( நூல் - புகாரீ )*

*பாருங்கள் !தாக்குதலுக்கு இரையான சிறுமி மரணத்தின் பிடியில் இருக்கும் போது நபி ( ஸல் ) அவர்கள் அச்சிறுமி மரணிக்கும் முன்பே அவள் மூலமாக குற்றவாளியைக் கண்டறிந்து அக்கிரமக்காரர்களுக்கு படிப்பினையாக தண்டனை வழங்குவதில் துரிதமாக இருந்தார்கள் .மதீனாவில் உள்ள அக்கிரமக்காரர்களின் பெயர்களின் தெளிவான விபரம் நபி ( ஸல் ) அவர்களிடம் இருந்த காரணத்தினாலேயே அவர்களின் பெயர்கள் ஒவ்வொன்றாக குறிப்பிட்டு அச்சிறுமியிடம் கேட்க முடிந்தது.*

*அவ்வாறு இல்லையெனில் அல்லாஹ்வின் தண்டனை ஒட்டு மொத்த சமூகத்தையும் பீடிக்கும் சூழல் ஏற்படும் .கீழ் கண்ட ஹதீஸ் அதனைத்தான் சுட்டிக் காட்டுகிறது.*

*மக்கள் அக்கிரமக்காரனை கண்டு அவர்கள் அவனை கரங்களால் தடுக்காவிட்டால் அல்லாஹ்வின் தண்டனை அவர்கள் அனைவரையும் பீடிக்கும் .( நூல் - அபூதாவூது )*

*நபி ( ஸல் ) அவர்கள் கூறினார்கள் ;அநீதி இழைக்கப்பட்டவரின் பிரார்த்தனைக்கு பயந்து கொள்ளுங்கள் .ஏனெனில் அவனுக்கும் இறைவனுக்கும் மத்தியில் எந்தத் திரையுமில்லை.*

*நமது நாட்டில் பல்வேறு பகுதிகளில் வாழும் அநீதி இழைக்கப்பட்ட லட்சக்கணக்கானவர்களின் பிரார்த்தனை அல்லாஹ்விடம் உயர்ந்துள்ளன .அந்தப் பிரார்த்தனைகளும் , கண்ணீரும் நம்மீது பேய் மழையாக பெய்யாதிருக்க நாம் அக்கிரமக்காரர்களின் கரங்களைப் பிடித்து தடுத்து நிறுத்துவதற்காகன துணிச்சலையும் , மன உறுதியையும் பெற வேண்டும்.*

*நபி ( ஸல் ) அவர்கள் கூறினார்கள் ;யார் ஒருவரை ஒரு தீமையைக் கண்டால் தனது கையால் தடுக்கட்டும் .முடியாவிட்டால் நாவினால் தடுக்கட்டும் .அதுவும் முடியாவிட்டால் மனதினால் இது தீமை என எண்ணிக் கொள்ளட்டும் .இது ஈமானின் பலவீனமான நிலை .( முஸ்லிம் )*

## போராட்டத்தின் முடிவு சுவனம்

*நிச்சயமாக அல்லாஹ் முஃமின்களிடமிருந்து அவர்களின் உயிர்களையும் , அவர்களின் பொருட்களையும் நிச்சயமாக அவர்களுக்கு சுவனம் உண்டு என்பதற்குப் பகரமாக விலைக்கு வாங்கிக் கொண்டான் .அவர்கள் அல்லாஹ்வுடைய பாதையில் போரிடுவார்கள் .அப்பொழுது ( எதிரிகளை ) அவர்கள் வெட்டுவார்கள் .( எதிரிகளால் ) அவர்களும் வெட்டப்படுவார்கள் .( இவர்களுக்கு சுவனம் தருவதாக ) தவ்ராத்திலும் , இன்ஜீலிலும் , குர்ஆனிலும் ( அல்லாஹ் ) தன் மீது உண்மையான வாக்குறுதியாக ( வாக்களித்துள்ளான் . ) தன் வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றுபவர் , அல்லாஹ்வை விட ( வேறு யார் இருக்கிறார் ? ஆகவே முஃமின்களே ! ) நீங்கள் எதைக் கொண்டு ஒப்பந்தம் செய்து கொண்டீர்களோ , அத்தகைய உங்களுடைய ( இவ் ) வியாபாரத்தைக்கொண்டு மகிழ்ச்சியடையுங்கள் .இதுவே மகத்தான வெற்றியாகும் .( அல்குர்ஆ ன் - 9 : 111 )*